# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 41/5 — 1973 ජනවාරි 11 වැනි බ්‍රහස්පතින්දා — 1973.01.11**

**41/5 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 11 ந் திகதி வியாழக்கிழமை**

( அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல்.டி.—பி.27/71

**1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய தொழிற் பயிற்சிச் சட்டம்**

**3 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1971 ஆம் ஆண்டின் 49 இலக்கத் தேசிய தொழிற் பயிற்சிச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் ரிக்கிரி பண்டா சுபசிங்க ஆகிய நான், 1973 ஆம் ஆண்டு தை மாதம் 5 ஆம் திகதியின் 41 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டதான இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளையுடனுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எல்லா வகுதிகளுக்குமுரிய தொழில் பயிலுநர்களுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகிறேன்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 11 ந் உ.

ரீ. பி. சுபசிங்க,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர்.

1–755/1

---

எல். டி.—பி. 27/71

**1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழிற் பயிற்சிச் சட்டம்**

1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் பயிற்சிச் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரினாலாக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

ரீ. பி. சுபசிங்க,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 11 ந் உ.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய தொழிற் பயிற்சி ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். அவை 1973 சனவரி 11 ந் திகதி அன்று நடைமுறைக்கு வரும்.

2. பதினாறு வயதினரான ஆனால் பதினெட்டு வயதை எய்தாத ஆளெவரும் எத்தகைய தொழிற்பயிற்சி வகுதியிலும் தொழில்பயிலுநராக வருமுன்னர் இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் விதிக்கப்பட்ட மூன்றும் இலக்கப் படிவத்தில் அத்தகைய ஆளின் தொழில்தருநரினால் அத்தகைய தொழில் பயிற்சி வகுதியில் அத்தகைய தொழில்பயிலுநரை ஈடுபடுத்துவதற்கான சான்றிதழொன்றுக்காகத் தொழிற் பயிற்சிச் சபைக்கு விண்ணப்பமொன்று செய்யப்படுதல் வேண்டும்.

பதினெட்டு வயதிற்குக் குறைந்த தொழில் பயிலுநர்கள்.

3. கல்வி, உடற்தகுதித் தேவைகளையும் சபையால் அந்த வகையினருக்கென விதிக்கப்பட்ட வேறெந்தத் தேவைகளையும் தொழில்பயிலுநர் திருப்திப்படுத்தினால், சபையால் தொழிற் பயிற்சியில் அத்தகைய தொழில்பயிலுநரை ஈடுபடுத்துதற்கான 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழான சான்றிதழொன்று வழங்கப்படும். ஆயினும், விதிக்கப்பட்ட கல்வித் தகைமையைப் பெறுவதற்குப் போதிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனச் சபை அபிப்பிராயப்படும் அத்தகைய தொழில்பயிலுநரின் விடயத்தில் சபை பொருத்தமானவையென நினைக்கும் அத்தகைய நிபந்தனைகளை அடக்கியதும் அத்தகைய தொழில்பயிலுநரை ஈடுபடுத்துவதற்குமான ஒரு சான்றிதழை சபையானது வழங்கலாம். தொழில்பயிலுநர் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகத் தவறியதாகச் சபை எந்த நேரத்திலும் திருப்திப்படுமிடத்து, சபையானது அத்தகைய சான்றிதழை நீக்கச் செய்து, அதைத் திருப்பிக் கொடுக்குமாறு அத்தகைய தொழில்பயிலுநரை வேண்டலாம்.

*பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட உத்தேசிக்கப்பட்ட தொழில்பயிலுநரை வேலையில் ஈடுபடுத்துவதற்கான சான்றிதழ்.*

4. மூன்றும் ஒழுங்குவிதியால் வழங்கப்பட்ட உத்தேசிக்கப்பட்ட தொழில்பயிலுநரை வேலையில் ஈடுபடுத்துவதற்குரிய சான்றிதழ் இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் விதிக்கப்பட்ட 4 ஆம் இலக்கப் படிவத்தில் இருக்கும்.

*சான்றிதழில் உள்ள கையொப்பம்.*

5. விதிக்கப்பட்ட படிவத்திலுள்ள ஒவ்வொரு சான்றிதழும் சபையின் சார்பில் தொழிற் பயிற்சிப் பணிப்பாளரினால் கையொப்பமிடப்படும்.

*அனுமதி வழங்க மறுத்தல்.*

6. பதினெட்டு வயதுக்குட்பட்ட உத்தேசிக்கப்பட்ட தொழில்பயிலுநரை வேலையில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கலுக்கான மறுப்பு, இதனோடுள்ள III ஆம் அட்டவணையின் 5 ஆம் இலக்கப் படிவத்தில் இருக்கும்.

*தொழில் பயிலுநர்களை வேலையில் ஈடுபடுத்தல்.*

7. ஆளெவரும், அந்த வகுதிக்கான பயிற்சித் திட்டத்தில் விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த வயது, கல்வி மற்றும் தேவைப்பாடுகள் என்பவற்றைத் திருப்திப்படுத்தினால் அல்லது அப்படிப்பட்ட வகுதியில் தொழில்பயிலுநரொருவராக வேலையில் ஈடுபடுவதற்கு அவருக்குச் சான்றிதழொன்று அளிக்கப்பட்டாலொழிய எந்த தொழில் பயிற்சி வகுதியிலும் தொழில்பயிலுநர் ஒருவராக ஈடுபடுத்தப்படலாகாது.

*உடற்றகுதி நியமங்கள்.*

8. கீழே விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த உடற்தகுதி நியமங்களைத் திருப்திப்படுத்தினாலன்றி ஆளெவரும் எந்த வகுதியிலும் ஒரு தொழில்பயிலுநராக ஈடுபடுத்தப்படத் தகுதியுடையராதலாகாது.

9. **பயிற்சிக்கான உடற்றகுதி நியமனங்கள்.—(i)** பயிற்சிவிழைநர் யாதாயினும் ஒட்டுநோய் அல்லது தொற்றுநோய்களுக்கான சான்றற்றவராய் இருத்தல் வேண்டும். சேவையாற்றுவதால் அதிகரிக்கக்கூடிய தன்மையுள்ள அல்லது சேவைக்கு அவரைத் தகுதியற்றவராக்கக்கூடிய அல்லது பொதுமக்களின் உடனலத்தைப் பங்கப்படுத்தக்கூடிய எத்தகைய நோய்களினாலும் அவர் பாதிக்கப்படலாகாது. எந்த விதத்திலேனும் காசநோயிலிருந்து விடுபட்டவராகவும் சுகப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அவர் முன்பு காசநோயினால் பீடிக்கப்பட்டவராக இருந்தால் அவர் தகுதியானவரென்றும் தொற்றிலிருந்து விடுபட்டவரென்றும் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

**(ii) உயரம், நிறை, மார்பு.**—பயிற்சிவிழைநர்கள் பின்வரும் ஆகக் குறைந்த நியமங்களைத் திருப்திப்படுத்த வேண்டும் :—

உயரம் : 146 சென்ரி மீற்றர்கள் ; நிறை : 38 கிலோ கிரும்கள் ; மார்பின் விரிகையைக் கருதாது, மார்பு 2·5 சென்ரி மீற்றர்களுக்குக் குறைந்திருக்கலாகாது ; ஆயினும் ஒரு பயிற்சிவிழைநர் குறித்த ஆகக் குறைந்த நியமங்களைத் திருப்திப்படுத்தாதிருந்து ஆனால் மாவட்ட மருத்துவ அலுவலர் பதவிக்குக் குறையாத மருத்துவ அலுவலரினால், 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தொழிற் பயிற்சிச் சட்டத்தின் கீழான குறிப்பிட்ட தொழிலில் தொழில்பயிலுநராக ஈடுபடுத்தப்படுவதற்கு உடற்றகுதியுடையவரென எழுத்து மூலம் சான்றுபடுத்தப்படுமிடத்து, அவர் அத்தொழிலில் தொழில்பயிலுநராக ஈடுபடுத்தப்படலாம்.

**(iii) கண்கள்.**—எவ்வித நோயுள்ள நிலையிலும் ஏதாவதொரு கண் அல்லது ஏதாவதொரு கண் இமையிலிருந்து, நோய் அதிகரிப்பு அல்லது மறுபடி நிகழ்தலுக்கான அபாயத்தையளிக்கும் எவ்விதச் சான்றுமிருத்தலாகாது.

**பார்வையின் நியமங்கள் :**

(அ) **பார்வையின் கூர்மை.**—எல்லாத் தொழில்களுக்குமுரிய ஆகக் குறைந்த பார்வைக் கூர்மையின் நியமம், ஒவ்வொரு கண்ணிலும் 6/18 ஆகவும் அல்லது கண்ணாடியில்லாது ஒரு கண்ணில் 6/12 உம் மற்றக் கண்ணில் 6/24 ஆகவும் இரு கண்களிலும் கண்ணாடியுடன் 6/9 ஆகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) **கிட்டிய பார்வை.**—பயிற்சிவிழைநர்கள் ஜே 4 இற்குக் குறையாத கிட்டிய பார்வையுடையவராக இருக்க வேண்டும். ஒரு கண்ணில் மாத்திரம் பார்வையுள்ள பயிற்சிவிழைநர்கள் நிராகரிக்கப்பட வேண்டும் ;

(இ) **நிறப் பார்வை.**—மின்வேலை புரியும் தொழில்பயிலுநரொருவர் சிறந்த நிறப்பார்வை உடையவராயிருத்தல் வேண்டும்.

**(iv) காதுகள்.**—இரு காதுகளிலும் கேட்கும் சக்தி நன்ருகவும், சீழ்வடியும் நோயுள்ள அறிகுறிகளில்லாதும் இருத்தல் வேண்டும். கேள்வித்துணைகள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

**(v) தோல்.**—கடுமையான அல்லது நாட்பட்ட சருமநோய்கள் அல்லது நாட்பட்ட சீழ்ப்புண்களின் அறிகுறிகள் இருத்தலாகா ;

**(vi) பேச்சு.**—பேச்சு முக்கியமாகத் தங்குதடையற்றதாக இருத்தல் வேண்டும்.

**(vii) உணவுத் தொகுதி :**

(அ) பயிற்சிவிழைநர்கள் மெல்லுவதற்குச் (சிறந்த நிலையில் உள்ள) போதுமான அளவு இயற்கைப் பற்கள் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) மண்ணீரல் தொட்டுணரக் கூடியளவு விரிவில்லாததாகவும் மண்ணீரல் பகுதி பலவீனமில்லாதுமிருக்க வேண்டும் ;

(இ) கல்லீரல் தொட்டுணரக் கூடியதாகவும் பலவீனமானதாயும் இருத்தல் ஆகாது ;

(ஈ) வாய் அவியல் இருத்தலாகாது ;

(உ) சிறுநீரில் சக்கரை இருத்தலாகாது ;

(ஊ) பயிற்சிவிழைநர்கள் குருதிரியதி, குதப்பிளவு, புரை, கவட்டு ஏணியா அல்லது புபோரேசீல், அல்லது இசுக்கியோ—நேர்குடல் சீழ்த்தம் அல்லது ஓதல் என்பன வற்றுல் பீடிக்கப்பட்டிருத்தல் கூடாது ;

**(viii) இதயக் கலனத் தொகுதி :**

(அ) இரத்த அமுக்கம் விரியுளி 85 இற்கும் ஒற்றுளி 120 இற்கும் கூடுதலாகாது ;

(ஆ) இதயக்கலனம் சம்பந்தமான நோய்களின் அறிகுறிகள் இருத்தலாகா.

**(ix) சுவாசத் தொகுதி.**—சுவாச உறுப்புகளின் நோய்கள் அனைத்தும் இல்லாதவராக பயிற்சி விழைநர்கள் இருக்க வேண்டும். மூச்சிழுப்பதற்கு தங்குதடை விளைவிக்கும் மார்புப் பிறழுரு இருத்தலாகாது.

**(x) பிறப்பு ஊறுநீர்த் தொகுதி.**—பிறப்பு ஊறுநீர் உறுப்பு நோய்களோ அல்லது எதுவித இயற்கைக்கு மாமுன தன்மையோ இருத்தலாகாது.

**(xi) என்புக்கூட்டுத் தொகுதி :**

(அ) எல்லா அங்கங்களின் தொழிற்பாடுகளும் சாதாரண எல்லைப்பாட்டுள் இருத்தல் வேண்டும் ;

(ஆ) முதுகெலும்பு அல்லது கை கால் உறுப்புகளில் பாரதூரமான பிறழுரு இருப்ப தற்கான சான்று இருத்தலாகாது.

**(xii) நரம்புத் தொகுதி.**—நரம்புத் தொகுதி சம்பந்தமான அல்லது மனம் சம்பந்தமான எதுவித நோய்களின் சான்றுகள் இருத்தலாகா.

**(xiii) சுரப்பித் தொகுதி.**—அகச்சுரப்பிகள் உட்பட சுரப்பித் தொகுதியில் காசநோய் அல்லது மற்றைய நோய்களின் சான்றுகள் இருத்தலாகா.

**(xiv) அம்மைப்பால் குத்துதல்.**—அண்மையில் அம்மைப்பால் குத்தியதற்குரிய சான்று உள்ள வரைத் தவிர்ந்த பயிற்சிவிழைநர் அம்மைப்பால் குத்துவிக்க வேண்டும்.

**(xv) அடையாளம்.**—மருத்துவ அலுவலரிடம் பயிற்சிவிழைநரின் அடையாள அட்டை கொடுக் கப்பட வேண்டும்.

**வேலையில் ஈடுபடுத்துவதற்கான அறிவித்தல்.**

10. ஒவ்வொரு தொழில்தருநரும், எவ்வகுதியிலும் தாம் வேலையில் ஈடுபடுத்திய எந்தத் தொழில்பயிலுநரும் தொழில் பயிற்சி தொடங்கிய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் அவ்வாறு தொடங்கியது பற்றி எழுத்து மூலம் பணிப்பாளருக்கு அறிவித்தல் கொடுக்கலாம். இதனேடுள்ள மூன்றும் அட்டவணையின் 6 ஆம் படிவத்தில் தொழில் பயிற்சித் தொடக்கத்திற்கான அறிவித்த லிருக்கும்.

**ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல்.**

11. தொழிற் பயிற்சி தொடங்கிய தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், தொழிற் பயிற்சியின் ஒவ்வொரு ஒப்பந்தமும் அதனுடைய மாற்றமும் மூன்று பிரதிகளில் தொழில்தருநரினுல் செய்யப்பட்டு சட்டத்தின் பிரிவு 43 (ஆ) இன் கீழ் பதியப்படுவதற்காகப் பணிப்பாளரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

(i) தொழிற் பயிற்சி வகுதியுடனும் தொடர்பாகச் செய்யப்படும் ஒவ்வொரு தொழிற் பயிற்சி ஒப்பந்தமும் இதனேடுள்ள மூன்றும் அட்டவணையின் I ஆம் பாகத்தின் 1 ஆம் இலக்கப் படிவத்தில் இருக்கும் ;

(ii) பராயமடையாதவருடன் செய்யப்படும் தொழிற் பயிற்சி ஒப்பந்தமொன்று இதனே டுள்ள இரண்டாம் அட்டவணையின் I ஆம் பாகத்தின் 2 ஆம் இலக்கப் படி வத்தில் இருக்கும் ;

(iii) முற்கூறியவாறு தொழிற் பயிற்சி ஒப்பந்தம் அல்லது ஒரு ஒப்பந்த மாற்றம் பதிவுசெய்யப்படுவதற்குக் கொடுக்கப்படாதிருந்தால், செலுத்தத் தவறும் ஒவ் வொரு மாதத்திற்கும் ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அதற்கான திறத்தவர்கள் கூட்டாக ஆளாதல் வேண்டும்.

**பதிவு செய்யும் முறை**

12. சட்டத்தின் பிரிவு 43 (ஆ) வுக் கிணங்கத் தொழிற் பயிற்சி ஒப்பந்தத்தைத் தொழில் தருநர் பதிவுசெய்விக்குமிடத்து அத்தகைய ஒப்பந்தத்தின் மூலப்பிரதியையும் இரு பிரதிகளையும் பணிப்பாளரிடம் அவர் ஒப்படைக்க வேண்டும்.

13. பதிவுசெய்தல் பின்வருவனவற்றால் நிறைவேற்றப்படும் :—

(அ) " 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தொழிற் பயிற்சிச் சட்டத்தைப் பின் பற்றிப் பதிவுசெய்யப்பட்ட ........ ஆம் இலக்க ஒப்பந்தம் " என்ற சொற்கள் மூலம் பிரதியிலும் அதன் பிரதிகளிலும் புறக்குறிப்பிடப்படுதல். அத்தகைய புறக்குறிப்பு பணிப்பாளரினால் கையொப்பமிட்டு முத்திரையிடப்பட்டுத் தேதியிடப்படும்;

(ஆ) புறக்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பிரதி, நடைமுறைத் தொழிற் பயிற்சி ஒப்பந்த இடாப்பின் ஒரு பகுதியாகவமையும் வண்ணம் பணிப்பாளரினால் வைத் திருக்கப்படுதல் வேண்டும் ;

(இ) புறக்குறிப்பிட்ட அத்தகைய ஒப்பந்தத்தின் மூலப்பிரதி தொழில்தருநருக்கும் பிரதி தொழில்பயிலுநருக்கும் அனுப்பப்படும்.

ஒப்பந்தத்தைப் பதிவு செய்ய மறுக்கும் அறிவித்தல்.

14. தொழிற் பயிற்சி ஒப்பந்தத்தைப் பதிவுசெய்ய மறுக்கும் அறிவித்தல் இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் 7 ஆம் இலக்கப் படிவத்தில் இருக்கும்.

தொழில் பயிலுநரின் மாற்றம்.

15. (முடிவுறாத தொழிற் பயிற்சிக் காலப் பகுதியில் சேவை செய்யவென) ஒப்பந்தத்தின் கீழ் உள்ள கடப்பாடுகளை நிறைவேற்ற விருப்பமும் திறனுமுடைய இன்னொரு தொழில்தருநரிடம் தொழில்பயிலுநரொருவர் மாற்றப்படலாம்.

மாற்றப்படுவதற்கெனத் தொழில் பயிலுநரினால் செய்யப்படும் விண்ணப்பம்.

16. தொழில்தருநரினால் செய்யப்படும் ஒரு தொழில்பயிலுநரின் மாற்றம் பற்றிய விண்ணப்பம் இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் 8 ஆம் இலக்கப் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

மாற்றப்படுவதற்கெனத் தொழில் பயிலுனரினாற் செய்யப்படும் விணப்பம்.

17. தொழில்பயிலுநரினால் மாற்றத்துக்காகச் செய்யப்படும் விண்ணப்பம் இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் 9 ஆம் இலக்கப் படிவத்திலிருத்தல் வேண்டும்.

ஒப்பந்தத்தின் புதுக்கல்.

18. தொழிற் பயிற்சி மாற்றம் எதனுடனும் தொடர்பான ஒப்பந்தப் புதுக்கல் இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் 10 ஆம் இலக்கப் படிவத்தில் இருக்கும்.

பயிற்சி அட்டவணையின் ஏற்புடைமை.

19. ஒவ்வொரு வகுதிப்படுத்திய தொழிலுக்குமுரிய பயிற்சித் திட்டத்தின் ஏற்பாடுகள், இலங்கை முழுவதிலுமுள்ள அந்த வகுதியினரான எல்லாத் தொழில் பயிலுநரினதும் தொழில் தருநர்களுக்கும் பயிற்சியிலிருக்கும் எல்லா வகுதியினரான தொழில்பயிலுநருக்கும் ஏற்புடைத்தாகும்.

தொடர்பான போதனைகள்.

20. தாபனமொன்றில் செய்முறைப் பயிற்சியிலிருக்கும் ஒவ்வொரு தொழில்பயிலுநருக்கும் செய்முறைப் பயிற்சிக் காலத்தின்போது (அவரின் தொழிலுக்குத் தோதாகவிருக்கும்) தொடர்பான போதனைகள் கொடுக்கப்படும்.

21. தொடர்பான போதனை வகுப்புகளுக்கு ஒரு தொழில்பயிலுநர் சமூகமளிக்கும் எந்தளவு நேரமும் சேவையாற்றிய நேரமாகக் கணக்கிடப்படும். அத்தகைய போதனைகளுக்கு அனுமதியின்றி சமூகமளிக்காதிருத்தல் தொழில்பயிலுநர் கடமை தவறல் காரணமாக சமூகமளிக்கவில்லை எனக் கணிக்கப்படுவதுடன் தொழில்பயிலுநரின் படியிலிருந்து விதிக்கத்தக்க படியை கழித்தற்குத் தொழில் தருநரும் உரித்துடையராவர்.

22. தொடர்பான போதனை வகுப்புகளுக்குச் சமூகமளிக்க வேண்டிய நேரத்தில் தொழில் தருநரெவரும் எந்தத் தொழில்பயிலுநரையும் தொழில் செய்விக்கவோ செய்ய அனுமதிக்கவோ கூடாது.

ஆகக்குறைந்த வருகை.

23. ஒரு தாபனத்தில் பயிற்சிபெறும் ஒவ்வொரு தொழில்பயிலுநரும் ஓராண்டுப் பயிற்சியின்போது ஆகக் குறைந்தது இருநூற்றைம்பது நாட்களுக்கு வருகை அளிக்க வேண்டும். அதன் ஐந்திலொரு பங்கு அதாவது ஐம்பது நாட்களைத் தொடர்பான போதனைக்கும் இருநூறு நாட்களை செய்முறைப் பயிற்சிக்கும் செலவிடலாம்.

24. தொழில்பயிலுநர் ஒருவர், மேலே பிரிவு 25 இல் குறிப்பிட்ட ஆகக் குறைந்த காலத்திற்கு எக்காரணம் கொண்டும் பயிற்சியை மேற்கொள்ள முடியாதவிடத்துத் தேசிய தொழிற் பயிற்சிச் சபையினால் நடத்தப்படும் தொழிற் பரீட்சையை எடுப்பதற்குத் தகைமையாவதற்கு அடுத்து வரும் ஆண்டில் ஏற்பட்ட துண்டு வீழ்ச்சியை ஈடுசெய்ய ஒருசந்தர்ப்பம் அவருக்கு வழங்கப்படலாம்.

தொழில் பயிலுநருக்கு விடுப்பு வழங்குதல்.

25. ஒவ்வொரு வகையினதான விடுப்பின் கீழும் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, தொழில்பயிலுநரொருவர் பின்வரும் வகையினவான விடுப்புகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும். தொழிற் பயிற்சியின் முதல் ஆண்டின்போது இவ்விடுப்பை வழங்குதல் விகிதாசார அடிப்படையில் இருத்தல் வேண்டும் :—

(அ) அமய விடுப்பு :

(i) ஓராண்டில் 14 நாட்களைக் கொண்ட ஆகக் கூடிய காலமொன்றுக்கு அமய விடுப்பு வழங்கப்படுதல் வேண்டும் ;

(ii) அமய விடுப்புக் காலத்தின்போது இடையில் வரும் எவையேனும் விடுமுறை நாட்கள், 14 நாட்களைக் கொண்ட வரையறையின் நோக்கத்துக்காகக் கணக்கிடப்படுதலாகா ;

(iii) ஆண்டின்போது பயன்படுத்தப்படாத அமய விடுப்பு, ஆண்டின் இறுதியில் காலங்கழிந்து போனதாகவிருத்தல் வேண்டும் ;

(iv) அமய விடுப்பு மருத்துவ விடுப்புடன் சேர்க்கப்படலாகாது. அமய விடுப்பு மருத்துவ விடுப்பினால் முன்தொடரப்பட்டால் அல்லது பின்தொடரப்பட்டால் எடுக்கப்பட்ட முழு விடுப்பும் மருத்துவ விடுப்பாக அல்லது அமய விடுப்பாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆயின், விடயத்திற்கேற்ப, மருத்துவ அல்லது அமய விடுப்புத் தொடர்பில் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய காலத்திற்கு மேற்படுவதற்கு அது அனுமதிக்கப்படுதலாகாது ;

(v) நெருக்கடியான அவசரமேற்படும் விடயத்திலன்றி, அத்தகைய விடுப்புக்கான விண்ணப்பம் முறையான அதிகாரிக்குச் செய்யப்பட்டும் விடுப்பைப் பயன்படுத்து முன்னர் அங்கீகாரம் பெறப்பட்டுமிருத்தல் வேண்டும்.

**(ஆ) மருத்துவ விடுப்பு :**

(i) சுகவீனம் காரணமாக கடமையைப்புரிய இயலாதிருக்கும் தொழில்பயிலுநருக்கு ஒவ்வொரு பயிற்சியாண்டிற்கும் 7 நாட்கள் வரையிலான மருத்துவ விடுப்பு வழங்கப்படலாம் ;

(ii) மருத்துவ விடுப்புக் காலத்தின்போது இடையில்வரும் விடுமுறை நாளெதுவும், மருத்துவவிடுப்பாகக் கொள்ளப்பட்டு மேலே (i) ஆம் வாசகத்தின் கீழ் விதிக்கப்பட்ட வரையறைகளிற் கணக்கிடப்படுதல் வேண்டும் ;

(iii) தொழில்தருநர், தொழில்பயிலுநரின் மருத்துவ விடுப்பக்காதாரமாகப் பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலரிடமிருந்து மருத்துவச் சான்றிதழொன்றைக் காண்பிக்கும்படி தொழில்பயிலுநரைக் கேட்கலாம். விடுப்பானது மூன்று நாட்களுக்கு மேற்படின் மருத்துவச் சான்றிதழொன்று அவசியமாகும் ;

(iv) தொழில்பயிலுநர் உண்மையில் சுகவீனமற்றவரென அல்லது அவரது சுகவீனம் அவர் வருகைதருவதனைத் தடுக்கக்கூடிய அத்தகையவொரு தன்மையினதல்லவென தொழில்தருநர் நம்புவதற்குக் காரணமிருப்பின், அத் தொழில்பயிலுநருக்கான விசேட மருத்துவப் பரிசோதனையொன்றுக்கு ஒழுங்கு செய்வதற்கு அவர் இயலுமானவராதல் வேண்டும்.

**(இ) அதிவிசேட விடுப்பு :**

(i) விடுப்பானது எக்காரணங்களின்மேல் விண்ணப்பிக்கப்படுகின்றதோ அக் காரணங்கள் பற்றித் தொழில்தருநர் திருப்திப்படின், தொழில்பயிலுநர் அவரது முழு அமய விடுப்பையும் அல்லது மருத்துவ விடுப்பையும் முடித்தபின்னர் தொழில்தருநரினாற்றீர்மானிக்கப்படவேண்டிய உச்ச எல்லை வரையிலான சம்பளமில்லாத அதிவிசேட விடுப்பு வழங்கப்படலாம் ;

(ii) முறையான விடுப்பு விதிகள் வேலையாட்களுக்கு உளதாயிருக்கும் தாபனங்களில், இவ்விதிகளுக்கிணங்கத் தொழில்பயிலுநருக்கான விடுப்பு தொழில்தருநரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

26. தொழில்பயிலுநரொருவர், மேலுள்ள பிரிவு 23 இலும் பிரிவு 24 இலும் குறிப்பிட்டபடி பயிற்சிக்காலத்தின் போது ஆக்க்குறைந்த காலத்திற்கு வருகையளிக்கமுடியாது இருந்தால் அவர் முழுக்காலப் பயிற்சி பெற்றவராகக் கருதப்படமாட்டார். தொழில்தருநர், பணிப்பாளரின் சம்மதத்துடன் அவரது பயிற்சிக் காலத்தை நீடிக்கலாம்.

தேர்வு.

27. ஒவ்வொரு தொழில்பயிலுநரும், சபையினால் தீர்மானிக்கப்பட்ட இடங்களிலும் நேரங்களிலும் தத்தம் தொழிற்பயிற்சி வகுதியில் அவரது திறமையைத் நீர்மானிக்க வைக்கப்படும் தேர்வுக்குச் சமூகமளிக்க வேண்டும்.

முடிவுறுத்தல்.

28. தகுதிகாண் நிலைக்காலம் முடியுமுன்பு அல்லது நல்ல காரணத்திற்காக தொழில் பயிலுநரை நீக்குதல் அல்லது ஒப்பந்தத்தின் தகுந்த கால நிறைவினால் ஏதாவது தொழிற்பயிற்சி ஒப்பந்த முடிவும் அத்தகைய ஒரு தொழில்பயிலுநருநரின் ஒவ்வொரு மாற்றமும் இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் 11 ஆம் இலக்கப் படிவத்தில் அறிவிக்கப்படவேண்டும். அத்தகைய அறிவித்தல் பெறப்பட்டதன்பேரில் பணிப்பாளர், உடனடியாக ஒப்பந்தத்தின் பதிவை அதனுடைய கோப்பிடப்பட்ட பிரதியில் முடிவுபற்றிய குறிப்பொன்றைப் புறக்குறிப்பிடுவதனால் நீக்கஞ்செய்து தொழில்தருநருக்கும் தொழில்பயிலுநருக்கும் அவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் (யாராவதிருந்தால்) அவருக்கும் அத்தகைய நீக்கஞ்செய்தல் பற்றி அறிவிப்பார்.

29. தேசிய தொழிற்பயிற்சிச் சபையின் பணிப்பாளர், திறத்தவர்களில் யாராவது ஒருவரின் மரணம் காரணமாகத் தொழிற்பயிற்சி ஒப்பந்தம் முடிவுற்றதெனத் திருப்திப்பட்டால், அப்பொருள்பட கோப்பிடப்பட்ட பிரதியில் ஒரு குறிப்பைப் புறக்குறிப்பிடலாம்.

ஒப்பந்தத்தை உரிய காலத்திற்கு முன் முடித்தல்.

30. காலக்கழிவினால் ஒரு தொழிற்பயிற்சி ஒப்பந்தம் முடியுமுன் அந்த ஒப்பந்தத்தின் திறத்தவர் யாராயினும், இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் விதிக்கப்பட்ட 12 ஆம் படிவத்தில் முடிவுறுத்தலுக்காகப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கலாம் (மும்பிரதிகளில் படிவங்கள் நிரப்பப்படல் வேண்டும்).

31. ஒப்பந்தத்தின் ஒரு திறத்தவர் அதன் நியதி நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறி யுள்ளாரெனவும், திறத்தவர்கள் எவரினதும் அவர்களில் ஒவ்வொருவரினதும் நன்மைக்கு அப் படிச் செய்வது விரும்பத்தக்கது எனவும் பணிப்பாளர் திருப்திப்பட்டால், அவர் முடிவுறுத்தற்கான விண்ணப்பத்தை அனுமதிக்கலாம்.

32. திறத்தவர் தொழில்பயிலுநரின் தொழில்தருநராக இருக்கும் பட்சத்தில், அவர் பணிப் பாளரினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய நட்டஈட்டைத் தொழில்பயிலுநருக்குக் கொடுக்க ஆளா வார்.

33. திறந்தவர் தொழில்பயிலுநராக இருந்தால், அவர் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படும் பயிற்சிச் செலவால் வந்த தொகையை, அந்தத் தொழில்தருநருக்கு அல்லது தேசிய தொழிற் பயிற்சிச் சபைக்குத் திருப்பிச் செலுத்தல் வேண்டும்.

மேன்முறை யீடுகள்.

34. பணிப்பாளரின் முடிவிற்கு எதிராக சட்டத்தின் பிரிவு 45 உட்பிரிவு 5 (இ) இன்படி அதி காரமளிக்கப்பட்ட சபைக்குச் செய்யப்படும் ஏதாவது மேன்முறையீடு இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் 13 ஆம் இலக்கப் படிவத்திலான அறிவித்தல் மூலம் கொணரப்படுதல் வேண்டும்.

35. பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட பயிற்சி அளிக்கப்படவேண்டிய தொழில்பயிலுநரின் எண்ணிக்கையும் அவர்களின் தேர்வு என்பனவற்றிற்கும் எதிராகப் பிரிவு 46 உட்பிரிவு (6) இன்படி அதிகாரமளிக்கப்பட்ட சபைக்குச் செய்யப்படும் ஏதாவது மேன்முறையீடு, இதனோடுள்ள மூன்றும் அட்டவணையின் 14 ஆம் இலக்க அறிவித்தல்மூலம் கொணரப்படுதல் வேண்டும்.

36. மேன்முறையீட்டாளர், மேன்முறையீடு பற்றிய அறிவித்தலைச் சபையின் செயலாள ருக்கு, மேன்முறையீட்டாளருக்குப் பணிப்பாளரின் முடிவுபற்றிய அறிவித்தல் கிடைத்த முப்பது நாட்களுக்குள் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் ; ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், செய லாளருக்கு அவ்வாறான மேன்முறையீட்டை மூன்று பிரதிகளில் அதே காலத்திற்குள் அவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

37. செயலாளர், அறிவித்தலின் மூன்று பிரதிகளையும் முடிவுறுத்தலைப் பொறுத்தமட்டில், (ஏதாவது இருந்தால்) தொழிற்பயிற்சி ஒப்பந்தப் பிரதியையும் பெற்றுக் கொண்டதன் பேரில், பிரதிவாதிக்கு ஒரு பிரதியை அனுப்பி, தீர்மானத்திற்காகச் சபையின் முன்பு மேன்முறையீட்டைக் கொண்டுவர அவசியமான நடவடிக்கைகளனைத்தையும் எடுத்தல் வேண்டும்.

38. மேன்முறையீட்டாளர் அல்லது மேன்முறையீட்டினால் பாதிக்கப்பட்ட வேறொருவர் அல் லது நிறுவனம் மேன்முறையீட்டின் மேல் சொல்லப்படும் சான்றுகள் அல்லது ஆதாரங்களைச் சபை செவிமடுக்க வேண்டுமென விரும்பினால், செயலாளருக்குத் தனது விரும்பம்பற்றி எழுத்துமூலம் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் ; அவர் அதன்மேல் மேன்முறையீட்டாளருக்கும் சம்பந்தப்பட்ட மற்றத்திறத்தவர்கட்கும் மேன்முறையீட்டைக் கேட்பதற்கான நேரம், திகதி, இடம் என்பனவற்றை அறிவிப்பார்.

39. அத்தகைய அறிவித்தலெதுவும் கொடுபடாதிருக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபை மேன்முறையீட்டை ஆலோசித்துத் தீர்மானிக்கும் பொருட்டுச் செயலாளர் மேன்முறையீட்டை சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

சபையின் முடிவு.

40. எந்த ஒரு மேன்முறையீடு சம்பந்தமாகவும் சபையின் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் மேன்முறையீட்டாளருக்கும் தொடர்புற்ற மற்றைய திறத்தினருக்கும் செயலாளர் அறிவிக்க வேண்டும்.

சபையின் உறுப்பி னர்கள் தகைமை யற்றவராதல்.

41. மேன்முறையீட்டில் ஈடுபட்ட அல்லது அதனால் பாதிக்கப்பட்ட சபை உறுப்பினரொருவர் மேன்முறையீட்டு விசாரணையில் பங்குபற்றத் தகமையுடையராகார்.

42. ஒரு மேன்முறையீடு, சபையிலுள்ள ஓர் உறுப்பினரின் சொந்தத் தொழில் அல்லது அவரின் தொழில்தருநடன் தொடர்புள்ளதாக இருந்தால், அவரும் தகமையற்றவராவார்.

43. ஒவ்வொரு தொழில்தருநரும், பயிற்சியிலிருக்கும் தொழில்பயிலுநர் ஒவ்வொருவர் சம்பந்தமாகவும் பேணவேண்டிய பதிவேடுகள் இதனோடுள்ள நான்காம் அட்டவணையிற் தரப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

பதிவேடுகளும் விபரத்திரட்டு களும்.

44. ஒவ்வொரு தொழில்தருநரினாலும் பணிப்பாளருக்கு ஆண்டுதோறும் அனுப்பப்படும் விபரத்திரட்டுகளும் புள்ளிவிபரங்களும், இதனோடுள்ள நான்காம் அட்டவணையிற்றரப்பட்டுள்ள 16 ஆம் இலக்கப் படிவத்திலிருத்தல் வேண்டும்.

45. இவ்வொழுங்கு விதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய:—

(அ) " சட்டம் " என்பது 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழிற்பயிற்சிச் சட்டமெனப் பொருளாகும் ;

(ஆ) " சபை " என்பது 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழிற் பயிற்சிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய தொழிற்பயிற்சிச் சபையெனப் பொருளாகும் ;

(இ) " தவிசாளர் " என்பது தேசிய தொழிற்பயிற்சிச் சபைத் தவிசாளரெனப் பொரு ளாகும் ;

(ஈ) " பணிப்பாளர் " என்பது தொழிற்பயிற்சிப் பணிப்பாளரெனப் பொருளாகும் ;

(உ) " உறுப்பினர்கள் " என்பது சபையுறுப்பினர்களெனப் பொருளாகும் ; அத்துடன்

(ஊ) " செயலாளர் " என்பது சபைச் செயலாளரெனப் பொருளாகும்.

**தொழிற்பயிற்சிக் கட்டளைகள் 1972**

**முதலாம் அட்டவணை**

**விதிக்கப்பட்ட படிவங்கள்**

**பகுதி I**

தே. தொ. ச. படிவ இல. 1

**1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய தொழிற்பயிற்சிச் செய் சட்டம்**

**தொழிற்பயிற்சி ஒப்பந்தம்**

முதலாவது பகுதியைக் குறித்த ...... இல் தொழில் புரிபவரும் (இதனகத்துப்பின் " பணிகொள்வோர் " என்று குறிப்பிடப்படுபவரும்) ........................ ஆகிய ........................ம் இரண்டாவது பகுதியைக் குறித்த .............. இல் வசிப்பவரும் (இதனகத்துப் பின் " பயிலுநர் " என்று கூறப்படுபவரும்) ஆகிய ...... ............ம் மூன்றாவது பகுதியைக் குறித்த ............ இல் வசிப்பவரும் (இதனகத்துப்பின் " பிணைநிற்போர் " என்று கூறப்படு பவர். இச்சொற்றொடர் சந்தர்ப்பத்தினால் அல்லது பொருத்தமின்மை யால் சேர்க்கப்படாமலிருந்தாலேயொழிய அவருடைய உரித்தாளர்களை யும் மரணசாதன தத்துவக்காரர்களையும் சட்டமுறைப்பிரதி நிதிகளையும் சாட்டப்பட்டவர்களையும் உள்ளடக்குவதாக கருதப்பட வேண்டும்) ஆகிய ........................................ குமிடையே ;

(1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழிற்பயிற்சிச் செய்சட்டத்தின் கீழ் வகுதிப்படுத்தப்பட்ட) ........................ தொழிலில் பணிகொள்வோரிடம் பயிலுநராக சேவையாற்றுவதற்குப் பயிலுநர் இசைந்துள்ளாராதலினாலும்.

1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழிற்பயிற்சிச் செய் சட்டத்தின் கீழும் அதன் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளின் கீழும் பயிலுநராக அமர்த்தப்படுவதற்குத் தேவையான எல்லாத் தகைமை களையும் பயிலுநர் உடையவராகவிருப்பதாகத் தம்மைத்தாமே பணி கொள்வோர் திருப்திப்படுத்தியபின் அவரைத் தமது ஸ்தாபனத்தில் இதனகத்துப்பின் காணப்படும் நியதிகள், நிபந்தனைகளின் கீழ் பணிக் கமர்த்துவதற்குப் பணிகொள்வோர் உடன்பட்டுள்ளாராதலினாலும்,

இத்தால் சகலருமறிவதாக வெளிப்படுத்துவதுடன் பின் வருமாறு இருசாரார்களுக்கிடையே பரஸ்பரமாக இணக்கமேற்படுகின்றதென்று ஒத் துக் கொள்ளப்பட்டு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து .............. ஆம் ஆண்டு .............. மாதம் .......... நாளன்று இந்த ஒப்பந்தம் (அ) செய்யப்பட்டுள்ளது.

(1) பணிகொள்வோர் இத்தால் பயிலுநரை .................... தொழிலில் பணிக்கமர்த்துவதற்கு உடன்படுகின்றாரென்பதுடன் பயிலுநரும் இதனகத்துப்பின் கொடுக்கப்பட்டுள்ள விதத்தில் பணிகொள்வோருக்கு சேவை செய்வதற்கு இத்தால் உடன் படுகிறார்.

(2) பயிற்சிக்குப் பயிலுநர் வந்துள்ள திகதியிற் தொடங்கி பயிற்சிக் காலம் .................... ஆகும். சொல்லப்பட்ட காலத் திற்குள் பயிலுநர் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சுக வீனம் அல்லது பிற சந்தர்ப்பங்களின் காரணமாக முழுத் தொழிற்பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்ய முடியாமலிருந் தால் பணிகொள்வோர் அவருடைய தொழிற்பயிற்சிக் காலத்தை அடுத்த சோதனை நடத்தப்படும் வரை நீடிப்பதற்கான அதி காரத்தையுடையவராவர். பயிலுநர் நெறியைப் பூர்த்தி செய்த பின் இறுதிச் சோதனையில் சித்தியடையத் தவறும் விடயத் திலும் இதைப் போன்று பயிற்சிக் கால நீடிப்பு பணிகொள் வோரினால் அனுமதிக்கப்படலாம். இரண்டாவது சோதனையில் பயிலுநர் சித்தியடையத் தவறுமிடத்து தொழிற்பயிற்சிப் பணிப் பாளரினால் பிற விதத்தில் தீர்மானிக்கப்பட்டாலேயொழிய அவருக்கு பயிற்சிக் கால நீடிப்பு எதுவும் வழங்கப்படலாகாது. பயிலுநர் தொழிற்பயிற்சிப் பணிப்பாளருக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையுடையவராவர். அத்தகைய எந்த நீடிப்பும் தொழிற்பயிற்சிப் பணிப்பாளரிடம் பதியப்பட்டிருத்தல் வேண் டும்.

(3) பயிலுநர் தனக்கும் பிற எந்தப் பணிகொள்வோருக்குமுடையே பிற எந்தத் தொழிற்பயிற்சி ஒப்பந்தமும் ஏற்கனவே இல்லை யென்றும் இந்தத் தொழிற்பயிற்சி ஒப்பந்தம் முடிவடைய அல்லது முடிவுறுத்தப்படமுன் தான் பிற எந்தப் பணிகொள் பவருடனும் தொழிற்பயிற்சி ஒப்பந்தமெதனையும் செய்வதற் குப் பொறுப்பேற்கமாட்டாரென்றும் இத்தால் பிரகடனப்படுத்து கின்றார்.

(4) இதனகத்து முன்னுள்ளதைப் போலவும் இதனகத்துப் பின் கொடுக்கப்பட்டுள்ளதற்கும் அமைவாக தொழிற்பயிற்சி ஒப் பந்தம். தொழிற்பயிற்சிக் காலம் முடிவடைந்தவுடன் முடிவு றும். **பயிற்சிக்காலத்தின் முதல் ஆறுமாதங்கள் தகுதிகூர் நிலைக் காலமாக கருதப்படும்.** இரண்டில் ஏதேனுமொரு கட்சி ஒப்பந்தத்தின் குறித்த காலத்துக்கு முந்திய முடிவுறுத்தலுக் காகத் தொழிற்பயிற்சிப் பணிப்பாளருக்கு விண்ணப்பமொன் றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பமொன்று செய்யப் பட்டவுடன் தொழிற்பயிற்சிப் பணிப்பாளர் ஒப்பந்தத்தின் மறு கட்சிக்கு அதைப் பற்றி அறிவித்தல் வேண்டும். அதன் பின் இரு கட்சியினர்களின் கருத்துக்களையும் ஆய்வு செய்தபின் ஒப்பந்தத்தின் கட்சியினர்களும் அல்லது அக்கட்சிகளின் எந்தக் கட்சியும் ஒப்பந்தத்தின் நியதிகளையும் நிபந்தனைகளையும் நிறை வேற்றத் தவறியுள்ளதாகவும் அக்கட்சியினர்களின் அல்லது அக்கட்சிகளில் எந்தவொன்றினதும் நலனில் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவது விரும்பத்தக்கதென அவர் திருப்திப்பட்டால் அவர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தலாம்.

(5) பணிகொள்வோர் தமது பங்கில் ஒப்பந்தத்தின் நியதிகள், நிபந் தனைகளை நிறைவேற்றத் தவறுவதன் மூலம் தொழிற்பயிற்சி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டால் பயிலுநருக்கு அவர் தொழிற் பயிற்சிப் பணிப்பாளரினால் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையைக் கொடுத்தல் வேண்டும்: இந்தத் தொகை பயிலுநர் மேற்கொண்ட பயிற்சி மாதங்களின் எண்ணிக்கை யின் அடிப்படையிலிருக்கும்.

எனினும் தகுதிகூர் நிலைக்காலத்தில் பயிலுநர் அமர்த்தப் பட்டுள்ள தொழிலில் தொழிற்பயிற்சி பெறுவதற்கு பயிலுநர் தகுதியற்றவராக காணப்பட்டு பணிகொள்வோரினால் அவர் தகுதியுள்ளவராகக் காணப்படும் பிறிதொரு பெயர் குறிப்பிடப் பட்ட தொழிலில் தொழிற்பயிற்சியைப் பெறுவதற்கு அவர் மறுத்துள்ள அடிப்படையில் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற் குத் தொழிற்பயிற்சிப் பணிப்பாளருக்கு பணிகொள்வோர் விண்ணப்பமொன்றைச் செய்தால் பணிகொள்வோரின் விண் ணப்பத்தின் பொருடளக்கத்தையும் மற்றக்கட்சியினால் பதிவு செய்யப்பட்ட ஆட்சேபனைகள் ஏதுமிருந்தால் அவற்றையும் ஆய்வு செய்த பின் தொழிற்பயிற்சிப் பணிப்பாளர் கட்சி களின் அல்லது அக்கட்சிகளின் எந்தவொன்றினதும் நலன் களின் சார்பில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட வேண்டும் என்று திருத்தப்பட்டால் பயிலுநருக்குப் பணிகொள்வோர் இழப்பீடு எதனையும் கொடுக்க வேண்டியதில்லை.

இன்னும் தகுதிகூர் நிலைக்காலத்தில் பயிற்சி பெறுவதற்கு அமர்த்தப்பட்ட தொழில் அல்லது ஸ்தாபனத்தில் பயிற்சி பெறத் தான் தகுதியில்லையென தம்மைத் தாமே காணும் அடிப்படையில் தொழில் பயிலுநர், தொழிற்பயிற்சிப் பணிப் பாளருக்கு ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தால், அத்தகைய விண்ணப்பத்தின் பொருள டகத்தையும் மற்றக் கட்சியினால் பதிவு செய்யப்பட்ட ஆட்சேபனை கள் ஏதுமிருந்தால் அவற்றையும் ஆய்வு செய்த பின் தொழிற்பயிற்சிப் பணிப்பாளர் கட்சிகளின் அல்லது அக் கட்சிகளின் எந்த ஒன்றினதும் நலன்களின் சார்பில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட வேண்டுமென்று திருப்திப்பட்டால் பணி கொள்வோருக்கு பயிலுநர் இழப்பீடு எதனையும் கொடுக்க வேண்டியதில்லை.

(6) பயிலுநர் தனது தொழிற்பயிற்சிக்காலத்தைப் பூர்த்தி செய்ததன் மீது பயிலுநருக்கு பணிகொள்வோர் தனது பங்கில் தொழில் வழங்கும் கடப்பாட்டையோ அல்லது பயிலுநர் தன் பங்கில் பணிகொள்வோரின் கீழ் தொழிலை ஏற்றுக்கொள்ளும் கடப் பாட்டையோ உடையவரல்லர்.

(7) இங்குள்ள பட்டோலை I இல் உட்கொள்ளப்பட்டிருக்கும் கடப்பாடு களைப் பணிகொள்வோர் நிறைவேற்ற வேண்டும். அத்துடன் பயிலுநர் இங்குள்ள பட்டோலை II இல் உட்கொள்ளப்பட்டிருக் கும் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

(8) இந்த ஒப்பந்தத்திலிருந்து பணிகொள்வோருக்கும் பயிலுநருக்கு மிடையே எழும் எந்த கருத்து வேறுபாடும் அல்லது பிணக்கும் பற்றி முடிவு செய்யும் பொருட்டு அது தொழிற்பயிற்சிப் பணிப் பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். தொழிற்பயிற்சிப் பணிப் பாளரின் முடிவினால் மனக்குறையடைந்துள்ள எவரும் அத்த கைய முடிவு தமக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அத்தகைய முடிவுக்கு எதிராக தேசிய தொழிற் பயிற்சிச் சபைக்கு முறைப்பாடொன்றைச் செய்யலாம். தேசிய தொழிற் பயிற்சிச் சபையினால் விசாரணை செய்யப்பட்டு அது பற்றிய முடிவு எடுக்கப்படுதல் வேண்டும். சபையின் முடிவு இறுதியானதாகும்.

(9) பயிலுநர் தனது பங்கில் ஒப்பந்தத்தின் நியதிகளை நிறைவேற்றத் தவறுவதன் மீது தொழிற்பயிற்சி ஒப்பந்தம் முடிவுறுத்தப்படு மிடத்து பிணை நிற்போர் பயிலுநரின் பயிற்சிச் செலவின் தொடர்பில் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாமல் தொழிற் பயிற்சிப் பணிப்பாளரினால் நிர்ணயிக்கப்படும் தொகையைப் பணிகொள்வோருக்கு திருப்பிக் கொடுப்பதற்கு இத்தால் உத்தர வாதம் அளிக்கிறார். அத்துடன் பிணைநிற்போர் இத்நால் சட்டத்தினால் தமக்கு உரிமையுடைய முறைநன்மையையும் பிற நன்மைகளையும் சிறப்புரிமைகளையும், விதிவிலக்குகளையும் துற ந்து பணிகொள்வோரினால் கேட்கப்பட்டவுடன் அத்தொகையை அவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(10) இத்தால் பெறுவதற்குக் கருதப்பட்டுள்ள எந்தப் பணத்தொகையின் கொடுப்பனவையும் செயல் முறைப்படுத்துவதில் பணிகொள்வோரின் அசட்டையும் அல்லது பொறுமையும் அல்லது இப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்காக பணிகொள்வோரினால் வழங்கப்படும் கால அவகாசமும் பிணை நிற்போரை இதனகத்து முன்னரே உட்கொள்ளப்பட்டுள்ள உத்தரவாதத்தின் கீழ் அவருடைய பொறுப்பிலிருந்தும் எவ்விதத்திலும் விடுவிக்கமாட்டாது.

(11) இதனகத்து முன்னரே உட்கொள்ளப்பட்டுள்ள உத்தரவாதம் பணிகொள்வோரின் யாப்பிலுள்ள எந்த மாற்றத்தினாலும் பாதிக்கப்படமாட்டாது.

(12) 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய தொழிற்பயிற்சிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளும் அதன் கீழ் செய்யப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளும் கூட இந்த ஒப்பந்தத்தின் ஒரு பாகமாக கருதப்படும்.

இத்தாற் சகலருமறிவதாக இங்குள்ள கட்சியினர்கள் இந்த ஒப்பந்தத்தை மேலே முதலாவதாக எழுதப்பட்ட நாளிலும் ஆண்டிலும் நிறைவேற்றியுள்ளார்கள் என்று வெளிப்படுத்துகிறோம்.

ஒப்பமிட்டது..................
மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பணிகொள்வோர்.
பின்வருவோர்களின் முன்னிலையில்.

(பணிகொள்வோரின் ஒப்பம்)

பெயர்கள் முகவரிகளுடன் இருசாட்சிகளின் ஒப்பம்.

(1)

(2)

ஒப்பமிட்டது..................
மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பயிலுநர்.
பின்வருவோர்களின் முன்னிலையில்.

(பயிலுநரின் ஒப்பம்)

பெயர்கள், முகவரிகளுடன் இருசாட்சிகள் ஒப்பம்.

(1)

(2)

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பிணை நிற்போராகிய ................ ......ல் ஒப்பமிட்டது. இவர் முறைநன்மை என்ற சொற்றொடரின் கருத்தையும் அதை துறப்பதன் விளைவையும் பற்றித் தான் முழுமையாகத் தெரிந்து கொண்டதாகவும் பிரகடனப்படுத்துகிறார்.

(பிணை நிற்போரின் ஒப்பம்)

பெயர்கள், முகவரிகளுடன் இருசாட்சிகள் ஒப்பம்.

(1)

(2)

குறிப்பு.—(அ) பதிவு செய்யப்படுவதற்காக ஒப்பந்தத்தின் மூன்று பிரதிகள் தொழிற்பயிற்சிப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## பகுதி II

### பணிகொள்வோரின் கடப்பாடுகள்

(1) 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய தொழிற்பயிற்சிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி பயிலுநருக்குச் செய்முறைப் பயிற்சி நெறியொன்றை அளிப்பதற்குப் பணி கொள்வோர் தனது தாபனத்தில் அல்லது வேலைக்களத்தில் தகுந்த ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

(2) பணிகொள்வோர் பயிலுநரை குறித்துரைக்கப்படும் சம்பந்தப்பட்ட அறிவுறுத்துரைகளுக்காக சாதாரண வேலையாற்று நேரங்களில் விடுவிப்பதற்குப் போறுப்பேற்கிறார்.

(3) பணிகொள்வோர் முதலாவது ................ மாதங்களில் மாதமொன்றுக்கு .......... ரூபா படியொன்றினையும் இரண்டாவது ஆண்டில் மாதமொன்றுக்கு .......... ரூபா படியொன்றினையும் மூன்றாவது ஆண்டில் மாதமொன்றுக்கு .......... படியொன்றினையும் அதன்பின் தேசிய தொழிற் பயிற்சிச்சபையினால் நிர்ணயிக்கப்படும் படியொன்றினையும் பயிலுநருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(4) குறிப்பிட்ட மாதமொன்றுக்கான படி அடுத்த மாதம் 10 ஆம் திகதியன்வில் கொடுக்கப்பட வேண்டும். பணி செய்வோர் ஏற்பாட்டு நிதியத்திற்கான உதவு தொகைகளுக்கும் பயிலுநர் அங்கீகரிக்கப்படாத அல்லது அசாதாரணமான விடுப்பில் இருக்கும் காலங்களுக்கும் தவிர படியிலிருந்து எந்தக் கழிவுகளையும் செய்யலாகாது.

(5) பயிலுநர் பயிற்சி பெறும் காலத்தில் வாரவேலையாற்று நேரமும்

(அ) நாள்தோறும் எட்டு மணத்தியாலங்களுக்கும் (சம்பந்தப்பட்ட அறிவுறுத்துரைகளின் மீது செலவழிக்கப்படும் நேரத்தையும் உள்ளடக்கி)

(ஆ) வாரந்தோறும் 45½ மணித்தியாலங்களுக்கும் (சம்பந்தப்பட்ட அறிவுறுத்துரைகளின் மீது செலவழிக்கப்படும் நேரத்தையும் உள்ளடக்கி) மேற்பட்டிருத்தலாகாது.

(6) தொழிற்பயிற்சிப் பணிப்பாளரின் முன் அங்கீகாரமின்றிப் பயிலுநரை அத்தகைய பயிற்சியில் பி. ப. 6 மணிக்கும், மு.ப. 6 மணிக்கு மிடையிலோ அல்லது மேலதிக நேர வேலை செய்வதற்கோ ஈடுபடுத்தலாகாது.

(7) பணிகொள்வோர் விதிக்கப்படும் விதத்தில் பயிலுநருக்கு விடுப்பு வழங்கவேண்டும். தொழிற்பயிற்சியின் முதல் ஆண்டின் போது இவ்விடுப்பை வழங்குதல் விகிதாசார அடிப்படையில் இருத்தல் வேண்டும். இதன்படி முழுவாண்டொன்றில் பயிலுநருக்கு வழங்கப்படவுள்ள விடுப்பு பின்வருமாறு :—

(அ) அமய விடுப்பு—14 நாட்கள்

(ஆ) மருத்துவ விடுப்பு— 7 நாட்கள்

(8) பயிலுநர் தனது முழு அமய அல்லது மருத்துவ விடுப்பை எடுத்து முடித்த பின் அவரினால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள விடுப்புக்கான காரணங்களைப் பற்றிப் பணிகொள்வோர் திருப்திப்பட்டால் பணிகொள்வோரினால் நிர்ணயிக்கப்படவுள்ள ஆகக் கூடுதலான சம்பளமற்ற அசாதாரண விடுப்பு பயிலுநருக்கு வழங்கபடலாம்.

(9) பயிலுநர் பயிற்சி பெறும் தாபனத்தில் கடைப்பிடிக்கப்படும் விடுதலை நாட்களைப் பயிலுநருக்கும் பணிகொள்வோர் அனுமதிக்க வேண்டும்.

(10) தனது பயிற்சியின் போது பயிலுநரொருவருக்கு காயம் அல்லது விபத்து ஏற்பட்டால் பணிகொள்வோர் பயிலுநருக்கு வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி நட்டஈடு கொடுத்தல் வேண்டும்.

(11) வேலையாட்களின் உடனலம், பாதுகாப்பு, நலன் தொடர்பான தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பயிலுநரின் உடனலத்தையும் பாதுகாப்பையும் காப்பீடு செய்வதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் பணிகொள்வோர் எடுத்தல் வேண்டும்.

(12) பணிகொள்வோர் தான் தகைமையடைந்திராவிட்டால் பயிலுநரின் பயிற்சிக்குப் பொறுப்பாக உரிய முறையில் தகைமையடைந்துள்ள ஒருவரை வைத்திருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

.......................
பணிகொள்வோரின் ஒப்பம்.

பயிலுநரின் ஒப்பம்.
..................

## பகுதி III

### பயிலுநரின் கடப்பாடுகள்

1. நடத்தை, ஒழுக்காறு சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களிலும் தாபனத்தின் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் பயிலுநர் அமைந்து நடந்து தொழிலினதும் தாபனத்தின் உயர்தர உத்தியோகத்தர்களினதும் சட்டமுறையான எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

2. பயிலுநர் பயிற்சிக்காலம் முடிவடைய முன் தம்மை வேலையாளாக வன்றி பயிற்சி பெறுபவராக நடத்தித் தமது தொழிலை மனப்பூர்வமாகவும் ஊக்கமாகவும் கற்று தமது தொழிலில் தேர்ச்சிபெற்ற கைப்பணியாளராகத் தாம் தகைமையடைவதற்கு முயற்சி செய்யவேண்டும். 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய தொழிற்பயிற்சிச் சபைச்செய் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளனவற்றைத் தவிர தொழில தொடர்பான எந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளும் அவருக்கு ஏற்புடையனவாகமாட்டா.

3. பயிலுநர் அவருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட ஒழுங்கான செய்முறைப் பயிற்சி வகுப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட அறிவுறுத்துரை வகுப்புகள் ஏதாவதிருந்தால் அவற்றிற்கும் செல்லவேண்டும்.

4. பணி கொள்வோரினுலும் அல்லது பிற எந்த விதித்த அதிகாரியினுலும் நடத்தப்படும் காலாந்தரச் சோதனைகளுக்கும் தோற்றவேண்டுமென்பதுடன் தொழிலில் தேர்ச்சிச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்காக தேசிய தொழிற்பயிற்சிச் சபையினுல் நடத்தப்படவுள்ள இறுதிச் சோதனைக்கும் தோற்றுதல் வேண்டும்.

5. ஒப்பந்தத்தின் நியதிகளை நிறைவேற்றுவதற்கு பயிலுநர் தனது பங்கில் தவறியதன் காரணமாக தொழிற் பயிற்சி ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுமிடத்து பயிலுநர் தொழிற் பயிற்சிப் பணிப்பாளரினுல் பயிற்சிச் செலவாக நிர்ணயிக்கப்படும் தொகையைப் பணிகொள்வோருக்குப் பயிலுநர் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

6. மிகவும் அவசரமான விடயத்தில் தவிர பயிலுநர் மருத்துவ விடுப்பு தவிர்ந்த பிற எல்லாவிடுப்புகளுக்குமான விண்ணப்பங்களை இயைபுள்ள அதிகாரியிடம் சமர்ப்பித்து விடுப்பு எடுக்குமுன் அதற்கான அனுமதியைப் பெறவேண்டும்.

7. பயிலுநர் தொழிற்பயிற்சி ஒப்பந்தம் முடியுமுன் அல்லது முடிவுறுத்தப்பட முன் பிற எந்தப் பணிகொள்வோருடனும் பிற எந்தப் தொழிற்பயிற்சி ஒப்பந்தத்தையும் செய்து கொள்ளலாகாது.

8. பயிலுநர் சட்டத்தினுல் வேண்டப்படும் விதத்தில் பணிசெய்வோர் ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவு தொகை வழங்கவேண்டும். அத்துடன் அவர் இந்த நிதியத்தின் கீழ் நன்மைகளைப்பெறுவதற்கு உரிமையுடையவராவர்.

.................... ....................
பணிகொள்வோரின் ஒப்பம். பயிலுநரின் ஒப்பம்.

## இரண்டாம் அட்டவணை

### பகுதி I

தே. தொ. ச. படிவ இல. 2

### 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய தொழிற் பயிற்சிச் சட்டம்

### குற்றகையவர்களுக்கான தொழிற் பயிற்சி ஒப்பந்தம்

முதலாவது பகுதியைக் குறித்த ...... இல் தொழில் புரிபவரும் (இதனகத்துப்பின் "பணிகொள்வோர்" என்று குறிப்பிடப்படுபவரும்) ........................ ஆகிய ........................ம் இரண்டாவது பகுதியைக் குறித்த ............ இல் வசிப்பவரும் (இதனகத்துப் பின் "பயிலுநர்" என்று கூறப்படுபவரும்) ஆகிய ...... ............ம் மூன்றுவது பகுதியைக் குறித்த ............ இல் வசிப்பவரும் (இதனகத்துப்பின் "பெற்றோர்/பாதுகாவலர்" என்று கூறப்படுபவர், இச்சொற்றொடர் சந்தர்ப்பத்தினுல் அல்லது பொருத்தமின்மையினுல் சேர்க்கப்படாமலிருந்தாலேயொழிய அவருடைய உரித்தாளர்களையும் மரணசாதன தத்துவகாரர்களையும் உரிமைத் தத்துவகாரர்களையும் சட்டமுறைப் பிரதிநிதிகளையும் சாட்டப்பட்டவர்களையும் உள்ளடக்குவதாக கருதப்பட வேண்டும்) ஆகிய ........................ .......... குமிடையே.

(1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழிற்பயிற்சிச் செய்சட்டத்தின் கீழ் வகுதிப்படுத்தப்பட்ட)........................ தொழிலில் பணிகொள்வோரிடம் தனது பெற்றோரின்/பாதுகாவலரின் சம்மதத்துடனும் அங்கீகாரத்துடனும் பயிலுநராக சேவையாற்றுவதற்குப் பயிலுநர் இசைந்துள்ளாராதலினுலும்.

1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழிற்பயிற்சிச் செய்சட்டத்தின் கீழும் அதன் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளின் கீழும் பயிலுநராக அமர்த்தப்படுவதற்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் பயிலுநர் உடையவராகவிருப்பதாகவும் மூன்றுவது பகுதியின் சம்மதத்துடனும் அங்கீகாரத்துடனும் தமது தாபனத்தில் இதனகத்துப்பின் காணப்படும் நியதிகள், நிபந்தனைகளின் மீது பயிலுநர் தம்மைப் பயிலுநராக ஈடுபடுத்துவதற்கு உடன்பட்டுள்ளாரெனப் பணிகொள்வோர் தன்னைத்தானே திருப்திப்படுத்திக்கொண்டுள்ளாராதலினுலும்;

இத்தால் சகலருமறிவதாக வெளிப்படுத்தப்படுவதுடன் பின் வருமாறு இருசாரர்களுக்கிடையே பரஸ்பரமாக இணக்கமேற்படுகின்றதென்று ஒத்துக் கொள்ளப்பட்டு ஆயிரத்துத் தொளாயிரத்து ............ ஆம் ஆண்டு ........................ மாதம் .......... நாளன்று இந்த ஒப்பந்தம் (அ) செய்யப்பட்டுள்ளது.

(1) பணிகொள்வோர் இத்தால் பயிலுநரை .................... தொழிலில் பணிக்கமர்த்துவதற்கு உடன்படுகின்றுரென்பதுடன் பயிலுநரும் இதனகத்துப்பின் கொடுக்கப்பட்டுள்ள விதத்தில் பணிகொள்வோருக்கு சேவை செய்வதற்கு இத்தால் உடன்படுகின்றுர்.

(2) பயிற்சிக்குப் பயிலுநர் வந்துள்ள திகதியிற் தொடங்கி பயிற்சிக் காலம் .................... ஆகும். சொல்லப்பட்ட காலத்திற்குள் பயிலுநர் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சுகவீனம் அல்லது பிற சந்தர்ப்பங்களின் காரணமாக முழுத் தொழிற்பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்ய முடியாமலிருந்தால் பணிகொள்வோர் அவருடைய தொழிற்பயிற்சிக் காலத்தை அடுத்த சோதனை நடத்தப்படும் வரை நீடிப்பதற்கான அதிகாரத்தையுடையவராவர். பயிலுநர் நெறியைப் பூர்த்தி செய்த பின் இறுதிச் சோதனையில் சித்தியடையத் தவறும் விடயத்திலும் இது போன்று பயிற்சிக் கால நீடிப்பு பணிகொள்வோரினுல் அனுமதிக்கப்படலாம். இரண்டாவது சோதனையில் பயிலுநர் சித்தியடையத் தவறுமிடத்து தொழிற்பயிற்சிப் பணிப்பாளரினுல் பிற விதத்தில் தீர்மானிக்கப்பட்டாலேயொழிய அவருக்கு பயிற்சிக் கால நீடிப்பு எதுவும் வழங்கப்படலாகாது. பயிலுநர் தொழிற்பயிற்சிப் பணிப்பாளருக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையுடையவராவர். அத்தகைய எந்த நீடிப்பும் தொழிற்பயிற்சிப் பணிப்பாளரிடம் பதியப்பட்டிருத்தல் வேண்டும்.

